செய்தி வெளியீடு எண்: 534 நாள்:26.08.2019

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (26.8.2019) தலைமைச் செயலகத்தில், பொதுப்பணித் துறை சார்பில் கடலூர் மாவட்டம், கடலூர் பாரதி சாலையின் குறுக்கே 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாதசாரிகள் நடைமேம்பாலத்தை திறந்து வைத்தார்கள்.

பொதுப்பணித் துறையின் மூலமாக அரசு அலுவலகங்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், நீதிமன்றங்கள் உட்பட பல பொதுக் கட்டடங்களுக்கு திட்டமிட்டு, வடிவமைத்து, மதிப்பீடு தயாரித்து கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல், பாரம்பரிய கட்டடங்களைப் பாதுகாத்தல் மற்றும் புனரமைத்தல் ஆகிய பணிகளை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், கடலூர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் திரு.ஆ. அருண்மொழித்தேவன் அவர்களின் நாடாளுமன்ற உறுப்பினரின் உள்ளூர் தொகுதி மேம்பாட்டு திட்ட நிதியில், பொதுப்பணித் துறை மூலமாக கடலூர் மாவட்டம், கடலூர் பாரதி சாலையின் குறுக்கே 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாதசாரிகள் நடைமேம்பாலத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள். இதன்மூலம், கடலூர் புனித அன்னாள் பள்ளி மாணவிகள், இமாகுலேட் கல்லூரி மாணவிகள், வணிக வளாகங்கள், திரையரங்குகள் மற்றும் திருமண மண்டபங்கள் ஆகிய இடங்களுக்கு வந்து செல்லும் பொது மக்கள் சுமார் 2000 பேர் சாலையினை கடப்பதற்கு இந்த நடைமேம்பாலம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு.எம்.சி. சம்பத், தலைமைச் செயலாளர் திரு.க. சண்முகம், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு. எம். இராஜமோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9